2. அரசினர் தீர்மானங்கள்.

(அ) அவையுரிமைக் குழுவிற்கு பதினைன்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் **183**-வது விதியின்கீழ், **1974—75**-ம் நிதியாண்டிற்கான அவையுரிமைக் குழுவின் உறுப்பினராக இருக்கும்படி பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று, இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

3. அறிவிப்புகள்.

(அ) அவையுரிமைக் குழுவிற்கான தேர்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், அவை உரிமைக் குழுவிற்கு **(Committee of Privileges) 14** உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை **22—3—1974**-ம் நாள் வெள்ளிக் கிழமை, முற்பகல் **11** மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள், **22—3—1974**-ம் நாள், வெள்ளிக்கிழமை பிற்பகல் **3** மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் **23—3—1974**-ம் நாள் சனிக்கிழமை, காலை, **11** மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது **14**-க்கும் மேற்படின் **26—3—1974**-ம் நாள், செவ்வாய்க்கிழமையன்று காலை **9** மணிக்கும் பிற்பகல் **1** மணிக்கும் இடையே சட்டப் பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னாள் ஓய்வு அறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

(2) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) அவையினர் குழுவிற்கு பதிமூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.